## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 157/2022

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்தாள் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராமன் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 27-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

என்னுடைய ஆதார் அட்டையின் உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 2ம் வாதியின் ஆதார் அட்டையின் உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 3ம் வாதியின் ஆதார் அட்டையின் உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 14.10.1993ம் தேதியிட்ட பட்டா எண் 1165ன் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகும். பட்டா எண் 1753ன் மனை வரி தோராய பட்டாவின் அசல் **வா.சா.ஆ.5** ஆகம். கடந்த 06.02.2014ம் தேதியிட்ட சொத்து வரி ரசீது **வா.சா.அ.6** ஆகும். கடந்த 06.02.2014ம் தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீது **வா.சா.ஆ.7** ஆகும். மின் இணைப்பு எண் 24க்கான மின் கட்டண அட்டை **வா.சா.ஆ.8** ஆகும். கடந்த 10.05.2021ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது **வா.சா.ஆ.9** ஆகும். அஞ்சலக அட்டை **வா.சா.அ.10** ஆகும். திருப்பப்பட்ட

அஞ்சல் உறைகள் ( 4 எண்ணிக்கைகள்) **வா.சா.ஆ.11** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.27 17:10:04 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.